1973 நவம்பர் 19]

சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு அரசு தெரிவித்துள்ளது. நிர்வாகச் சீர்திருத்த ஆணைக்குழு தனது கருத்தை தற்போது வழங்கியுள்ளது. அவை அரசின் பரிசிலனையில் இருந்து வருகின்றன.

திரு. என். கே. பழனிசாமி: சமீபத்தில் ஸ்டேட் அட்மினிஸ்ட்ரேட்டிவ் ரிபார்ம்ஸ் கமிஷன் சர்க்காருக்குக் கொடுத்துள்ள அறிக்கையின்படி ஆர்.டி. ஓ. போன்ற வட்டார வளர்ச்சி அதிகாரிகளை நீக்கி அதற்குப் பதிலாக கலெக்டருடைய உதவியாளரை வைத்துக் கொண்டே பஞ்சாயத்து யூனியன்களைக் கவனித்துக் கொள்ளும் திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றனவா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: அவர்களுடைய கருத்து இப்போது தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அது பரிசிலனை செய்யப்பட்டு வருகிறது.

திரு. ஆ. பரந்தாமன்: தமிழ்நாட்டில் இன்றைக்குச் சில ஊராட்சி ஒன்றியங்கள் எண்ணிக்கையிலே அதிகமான ஊராட்சி மன்றங்களையும், சில ஊராட்சி ஒன்றியங்கள் எண்ணிக்கையிலே குறைவான ஊராட்சி மன்றங்களையும் பெற்றிருக்கிறது. அதன் விளைவாக, நிர்வாகத்தில் பல சங்கடங்கள் இருந்து வருகின்றன. இதைத் தவிர்க்கும் வகையில் விரைவில் சீரமைக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: ஏற்கனவே, இந்தத் திட்டம் அமல் செய்யப்பட்ட நேரத்தில் தமிழ்நாட்டுக்கு 375 ஒன்றியங்கள்தான் அமைக்கப்பட வேண்டுமென்று மத்திய அரசு ஆணை பிறப்பித்திருந்தது. அதிலும், கல்விராயன் மலைப்பகுதி நீங்கலாக 374 ஒன்றியங்கள்தான் போடப்பட்டிருக்கின்றன. அந்த 374 ஒன்றியங்களிலே அவ்வப்போது ஏற்பட்ட அந்தந்தச் சூழ்நிலைகளுக்கேற்ப ஊராட்சி மன்றங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. இது அடுத்த ஆண்டிலிருந்து மாநிலத் திட்டமாக மாற்றப்பட்டு பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு இதுபற்றிப் பரிசிலனை செய்து நடவடிக்கை எடுக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து கேள்வி எண் 182. . . .

3. நடைமுறைக் கேள்விகள்

(அ) அதிகத் துணை வினாக்கள் கேட்க அனுமதிப்பது குறித்து.

திரு. ஜே. ஜேம்ஸ்: பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். முன் இரண்டு கேள்விகளும் முக்கியமான கேள்விகள். ஆகவே, மேலும் அதிகமான துணைக் கேள்விகள் அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பாயின்ட் ஆப் ஆர்டர் அல்ல.

திரு. ஜே ஜேம்ஸ்: எவ்வளவு தடவை கை தூக்கினாலும் துணை கேள்விகள் கேட்க அனுமதி தராதது வருத்தத்தக்க விஷயம்.

(திரு. எஸ். வடிவேலும் எழுந்து நின்று கொண்டிருந்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கிட்ட தட்ட 1,200 கேள்விகளுக்கு விடைகள் அளிக்கப்பட வேண்டியுள்ளன. இந்தப் பத்து நாட்களில் 1,200 கேள்விகளையும் இந்த அவையில் வைக்க முடியுமா என்ற நிலை இருந்து கொண்டிருக்கும்போது இன்று 50 கேள்விகள் வினாப் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. முக்கியமான சில கேள்விகளுக்குத் துணைக் கேள்விகள் கேட்க அனுமதி அளித்துக் கொண்டுதான் வருகிறேன். இப்போதே ஒரு மணி நேரம் முடியப் போகிறது. இன்னும் 18 கேள்விகள் இருக்கின்றன. ஒரு மணி நேரம் ஆனவுடன் மற்ற அவைகளில் கடைப்பிடிப்பது போன்று மீதி இருக்கும் வினா-விடைகளை உறுப்பினர்களுக்கு அச்சடித்துக் கொடுத்து விடலாமா அல்லது அதிக நேரம் ஒதுக்க வேண்டுமா என்பது பற்றி உறுப்பினர்கள் முடிவு செய்ய வேண்டும். எதிர்க் கட்சித் தலைவர்கள் இதுபற்றிக் கருத்துக்களைக் கூறட்டும்.

THIRU R. PONNAPPA NADAR: Sir, some more time may be allowed for questions so that Members who are desirous to put supplementaries may be permitted to do so. This is a question of an important nature and that is the reason why, we would once again request the Hon. Speaker to be more indulgent.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் நேரம் கொடுத்துக் கொண்டுதான் வருகிறேன். அடுத்து கேள்வி எண் 182. . . .

திரு. ஜே. ஜேம்ஸ்: பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். Our suggestion is that this question is very important and so we would request the Hon. Speaker to give us time so that we may put more supplementary questions.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படி ஒரு முறை இல்லை. மேலும், துணைக் கேள்விகள் கொடுங்கள் என்று கேட்க முடியாது. முக்கியத்துவம் உள்ள கேள்வி, மேலும் விளக்கம் பெற வேண்டுமென்றால் 'அரை மணி நேர விவாதம்' வேண்டுமென்று கேளுங்கள். அதுபற்றிப் பேரவைத் தலைவர் எப்படி முடிவு செய்கிறார் என்று பிறகு பார்க்க வேண்டும்.

திரு. ஜே ஜேம்ஸ்: மேலும் துணைக் கேள்விகள் கேட்க அனுமதி கொடுங்கள் என்று கேட்கக் கூடாது என்றால் வேறு என்ன முறையைக் கையாள வேண்டுமென்று சொல்லுங்கள்.

1973 நவம்பர் 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குறிப்பிட்ட கேள்விக்கு மேலும் விளக்கங்களைப் பெற வேண்டியிருப்பதால் போதிய விளக்கம் பெறும் வகையில் 'அரை மணி நேரம் விவாதம் வேண்டும்' என்று கேட்க வாய்ப்பு இருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களுக்குப் போதிய சமயம் இல்லை யென்று சொன்னால் அப்போது அரை மணி நேரம் விவாதம் வைத்துக் கொள்ளலாம். மற்ற நேரங்களில் முக்கியமான கேள்விகளுக்கு அதிகமான துணைக் கேள்விகள் கேட்க நேரத்தை ஒதுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பிசினஸ் அட்வைசரி கமிட்டியில் இது பற்றி பிறகு முடிவு செய்து கொள்ளலாம்.

அடுத்து கேள்வி எண் 182.

2. விளுக்கள்—விடைகள்.—தொடர்ச்சி.

(1) வெள்ளிக் குறியிட்ட விளுக்கள்—தொடர்ச்சி.

ஊராட்சி ஒன்றியங்களுக்குப் பரிசுத் திட்டம்

* 182 **விளு.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விளுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறந்த பஞ்சாயத்து யூனியனைத் தேர்ந்தெடுத்து பரிசு வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறதா ?

(இ) ஆம் எனில், எந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகிறது ?

மாண்புமிகு அ. பெ. தர்மலிங்கம் : (அ) ஆம்.

(இ) சிறந்த ஊராட்சி ஒன்றியத்தை தேர்ந்தெடுப்பதில் பல துறைகளில் அவ் வொன்றியத்தின் சாதனைகள் கருத்தில் கொள்ளப்படுகிறது. அவைகளில் முக்கியமானவை வேளாண்மை, கால்நடை, மீன்வளம், சிறுபாசனம், கல்வி, சமூகக் கல்வி, மகளிர் மற்றும் குழந்தைகள் திட்டம், கூட்டுறவு, கிராமத் தொழில் கிராம வேலைத்திட்டம் முதலியன. இதற்கான மதிப்பெண் மற்றும் தெறிநிலை (Indicator) அரசு நிர்ணயித்துள்ளது. அந்தப் பெருக்க அட்டக்குக் குறியின் அடிப்படையில் அதிக மதிப்பெண் பெற்ற ஊராட்சி ஒன்றியத்தை அந்த மாவட்டத்தின் அவ் வருடத்தின் சிறந்த ஊராட்சியாக ஊரக வளர்ச்சி இயக்நர் தேர்ந்தெடுக்கிறார்.